## 28.8 உயர்நிலைக் குழு அறிக்கை – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்

கால்நடை பராமரிப்பு (ம) மீன்வளத் (பா.உ.2) துறை

அரசாணை (நிலை) எண் 129 — நாள் : 10.6.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 320 ஊரக வளர்ச்சித் துறை நாள் 11.1.97
2. அரசாணை (நிலை) எண் 100 ஊரக வளர்ச்சித் துறை நாள் 22.5.98
3. ஊரக வளர்ச்சித் துறை செயலரின் நே.மு.க எண் 14532/சி4/99/நாள் 11.5.99.

**ஆணை**

மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு மேலும் அதிகாரங்கள் உரிமைகள் பொறுப்புகள் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை குறித்து பரிசீலித்து பரிந்துரைகள் செய்ய பார்வை 1 மற்றும் 2–ல் உள்ள அரசு ஆணைகளின்படி மாண்புமிகு ஊராட்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு ஒரு உயர்மட்டக் குழு அரசு அமைத்தது அக்குழு பலமுறை கூடி இப்பொருள் குறித்து விவாதித்து பல பரிந்துரைகள் செய்துள்ளன. அரசு அப்பரிந்துரைகளை ஆய்வு செய்து. அதில் பல்வேறு பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டது.

2) கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்குவதற்கு கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள துறை அலுவலர்கள் ஒவ்வொரு பகுதி வளர்ச்சித் திட்டங்களுக்குப் பொறுப்பேற்று உள்ளாட்சி அலுவலர்களுக்கு உதவி புரிய அரசு ஒப்புதல் அளிக்கிறது (பரிந்துரைகள் 718)

| **பொருள்** | **துறை** | **கிராம ஊராட்சி/ஊராட்சி ஒன்றியங்கள் மாவட்ட ஊராட்சிகளுக்கு திட்டம் தயாரிக்க பொருப்புடைய அதிகாரிகள்.** |
|---|---|---|
| **கிராம ஊராட்சி அமைப்புகளுக்கு திட்டம் தயாரித்தல்** | | |
| பால்வள மேம்பாடு | பால்வளத்துறை, | பால் சேமிப்பு அதிகாரி |
| **ஊராட்சி ஒன்றிய அமைப்புகளுக்கு திட்டம் தயாரித்தல்** | | |
| பால்வள மேம்பாடு | பால்வளத்துறை | துணைப்பதிவாளர், பால் உற்பத்தி மற்றும் வளர்ச்சி |
| **மாவட்ட ஊராட்சி அமைப்புகளுக்கு திட்டம் தயாரித்தல்** | | |
| பால்வள மேம்பாடு | பால்வளத்துறை | மேலாண்மை இயக்குநர் பால் உற்பத்தி மற்றம் வளர்ச்சி |

(ஆளுநரின் ஆணைப்படி)

**மோகன் வர்கீஸ் சுங்கத்**
அரசு செயலாளர்